# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 11-11-2019 திங்கள் கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

பொருள் எண். 1

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 09-11-2019-ம் நாளைய தொலைபேசி செய்தியில் குழித்துறை நகராட்சி பகுதியில் இயற்கை இடர்பாடுகள் வடகிழக்கு பருவமழையினால் சேதமடைந்துள்ள சாலைகளை ரூ.123.00 இலட்சம் மதிப்பீட்டில், சீரமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குழித்துறை நகராட்சி பகுதியில் வடகிழக்கு பருவமழையினால் சேதமடைந்துள்ள கீழ்காணும் சாலைகளை சீரமைக்க கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 மற்றும் 4-ல் அரசடி வினாயகர்கோவில் (இடத்தெரு) சாலை முதல் கழுவன்திட்டை ஆர்.சி.தெரு சாலை, மற்றும் நீதிமன்ற சாலை தார் தளம் அமைத்தல், பெருந்தெரு மேல அம்மன்கோவில் முதல் கீழ அம்மன்கோவில் வரையுள்ள சாலை தார் தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.10, 16, 18,15 விளவங்கோடு மேல்நிலைப்பள்ளி செல்லும் சாலை சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல், கொடுங்குளம் குறுக்குதெரு (பீச்சப்பள்ளிவிளை) சாலை சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல், கீழ்பம்மம் உரக்கிடங்கு செல்லும் சாலை பந்நியணி முதல் பாஸ்டர்ஸ் லேன் மற்றும் குறுக்குதெரு (காட்டுவிளை) சாலை சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல் | 123.00 |

மேற்காணும் சாலைகளை சீரமைக்க முழு மானியமாக நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2458/2019/இ1

**நகர்மன்றத் தீர்மான எண். 3371**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 2

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவைப்படும் நிலவேம்பு கஷாய மருந்து 200 கிலோ வாங்கி வழங்கிட சுகாதார ஆய்வாளரின் 4-11-2019-ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளதன்டிப்படையில் பள்ளி குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு டெங்கு நோய் பரவாமல் தடுத்திட அவசர அவசியமாக நிலவேம்பு கஷாய மருந்து 200 கிலோ திண்டுக்கல் பிரிண்ட் சர்வ் நிறுவனத்திலிருந்து வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.5,00,000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- நிலவேம்பு கஷாய மருந்து அவசர அவசியம் கருதி வினியோகம் செய்ய மேலாளர், திண்டுக்கல் பிரிண்ட் சர்வ், 16A எஸ்.ஆர். மில்ஸ் ரோடு, திண்டுக்கல் என நிறுவனம் மூலம் வினியோகம் செய்திடவும் மேற்படி பொருள் விநியோகம் செய்து தொகையினை பொதுநிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கும்.
ந.க.எண்.2502/2019/அ2.

**நகர்மன்றத் தீர்மான எண். 3372**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சி பகுதியில் 21 வார்டுகளிலும் முகாம் (camp) டெங்கு நடத்துவதற்கு நிலவேம்பு கஷாயம் வழங்கிட முகாமில் பங்கேற்கும் மக்களுக்கு நிலவேம்பு கஷாயம் வழங்கிட ஆணையர் அவர்களின் 25-10-2019-ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளதனடிப்படையில்

10–டீ கான் (can) வாங்கவும் அதற்காக உத்தேச செலவினம் ரூ.25,000/-ம் பொது நிதியிலிருந்து செலவு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.2570/2019/அ2.

**நகர்மன்றத் தீர்மான எண். 3373**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 4

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 2 புகை அடிப்பான் இயந்திரம் வாங்கி வழங்கிட சுகாதார ஆய்வாளரின் 4-11-2019-ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளதால் மேற்படி இரண்டு இயந்திரம் அவசர அவசியமாக தேவைப்படுவதால் இந்நகர் பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவி இருப்பதால் இரண்டு எண்ணம் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.1,90,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.–1) மாவட்ட ஆட்சியரின் 4-11-2019-ம் நாளிட்ட ஆய்வு கூட்ட அறிவுரைப்படி மேலும் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்கும் பொருட்டு கூடுதலாக இரண்டு புகை தெளிக்கும் இயந்திரமும், கொசு ஒழிப்பு மருந்துகளும் வாங்கிக் கொள்ள அனுமதிக்கலாம்.

2) அதற்குரிய செலவு தொகையை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவு செய்யவும் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2501/2019/அ2.

**நகர்மன்றத் தீர்மான எண். 3374**
**அனுமதிக்கப்படுகிறது**

**குழித்துறை நகர்மன்றத்தின் 18-11-2019 திங்கள் கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்**

பொருள் எண். 1

தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2019-2020-ன் கீழ், கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 7-11-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 18-11-2019 அன்று Price Bid திறக்கப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | வார்டு 1-ல் படப்பறை முதல் வள்ளிக்கோட்டு குளம் வரை சிமெண்டு தளம் அமைத்தல், வார்டு எண்.4-ல் PWD அலுவலகம் முதல் பெருந்தெரு மீன்சந்தை வரை மற்றும் பெண்டு கடவு தெரு சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல், வார்டு எண்.5-ல் தபால் நிலைய சந்திப்பு முதல் கால்நடை மருத்துவமனை வரை (வி.எல்.சி. மைதானம் அருகில்) பேவர் பிளாக் தளம் அமைத்தல், வார்டு 10 கொல்லக்குடிவிளை சாலையில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் | 100.00 | 1) திரு.டி. ஜஸ்டின்குமார் 14-58/7 புளிநின்றவிளை குழித்துறை மதிப்பீட்டை விட 6.92% குறைவு<br>2) MJD Contruction & Engineering கண்ணுமாமூடு. மதிப்பீட்டை விட 3.09% குறைவு<br>3) திரு.எஸ். ஸ்டாலின் சேவியர்புரம், திருவிதாங்கோடு மதிப்பீட்டை விட 2.38% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்றத் தீர்மான எண். 3375**

**அனுமதிக்கப்படுகிறது**

**குழித்துறை நகர்மன்றத்தின் 26-11-2019 செவ்வாய் கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்**

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்ட திரு. தங்கன் என்பவரின் மனைவி திருமதி. அன்னம்மாள் என்பவர் தனக்கு ஓய்வூதிய பலன்கள் அனுமதிக்க கோரி சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக் கிளையில் தொடர்ந்த நீதிப்பேராணை WP.(M.D.) எண்.21329/16-க்கு நகராட்சி சார்பில் ஆஜராகிய வகைக்கு வழக்கு கட்டணம் ரூ.10000/- திரு.K. வாமனன் உயர்நீதி மன்ற வழக்கறிஞருக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3376**
**அனுமதிக்கலாம்**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஷீலா இவாஞ்சலின் என்பவரை அரக்கோணம் நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்ப்பட்டதை எதிர்த்து திருமதி. ஷீலா இவாஞ்சலின் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் W.P.(MD)No.3526/2015-ன்படி தொடரப்பட்ட வழக்கிற்கு இந்நகராட்சி சார்பில் ஆஜராகிய வகைக்கு வழக்கு கட்டணம் ரூ.10,000/- திரு. K. வாமனன் மதுரை உயர்நீதி மன்ற வழக்கறிஞருக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3377**
**அனுமதிக்கலாம்**

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் விளம்பரம் செய்த வகைக்கு தினமுரசு நாளிதழுக்கு ரூ.9975/- மற்றும் KAL Publication (P) Ltd.-க்கு ரூ.9975/- விளம்பரக் கட்டணம் வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணங்கள் சம்பந்தப்பட்ட பத்திரிக்கைகளுக்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3378**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.9841/- தினத்தந்தி நாளிதழுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணம் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3379**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.10,000/- தீக்கதிர் நாளிதழுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணம் தீக்கதிர் நாளிதழுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3380**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 6

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் அருகிலுள்ள உரக்கிடங்கில் (Dump site location) உள்ள தண்ணீரை (Ground Water) எடுத்து நீரின் தரத்தை ஆய்வு செய்து அறிக்கை பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.1773/2019/P3, நாள் 14-08-2019-ல் தெரிவிக்கப்பட்டதன் பேரில் மூன்று எண்ணம் தண்ணீர் மாதிரி மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மூலம் பரிசோதனை செய்து சான்று பெறப்பட்ட வகைக்கு ரூ.12330/- தமிழ் நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், நாகர்கோவிலுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி கட்டணம் குடிநீர் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3381**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 7

உள்ளாட்சித் தேர்தல் 2019 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கொண்டு வரப்பட்டதற்கான செலவினத்தொகை ரூ.12165/-ஐ நாகர்கோவில் மாநிகராட்சிக்கு வழங்கவும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல் நிலை சரிபார்க்கும் பணி மேற்கொள்ளுதல் தொடர்பாக செலவினத்தொகை ரூ.4520/-ஐ கொல்லங்கோடு பேரூராட்சிக்கு வழங்கிட கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.வ5/1601/2019-2, நாள் 5-11-2019 தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.167/2019/அ1.

**நகர்மன்றத் தீர்மான எண். 3382**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் TN75P1813–ன் 6 டயர்களும் ரீபட்டன் செய்ய இயலாத நிலையில் மிகவும் பழுதடைந்து மேற்கொண்டு வாகனம் இயக்க இயலாத நிலையிலுள்ளது. மேலும் வாகனம் வாங்கப்பட்டு இதுநாள் வரை 63760 கி.மீ. ஓடி உள்ளது. மேலும்

இவ்வாகனத்திற்கு புதிதாக டயர்கள் எதுவும் வாங்கப்படவில்லை. எனவே சுகாதார பணியின் அவசியம் கருதி புதிதாக 6 டயர்கள் வாங்குவதற்கு மதிப்பீடு ரூ.50,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி டயர்கள் வாங்குவதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3383**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 9

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வெட்டுவெந்நி அங்கன்வாடி மற்றும் பந்நியணி அங்கன்வாடி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிதாக அதே இடத்தில் அங்கன்வாடி கட்டிடங்கள் கட்டப்பட உள்ளதால் மேற்படி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்துவதற்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3384**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 10

குழித்துறை நகராட்சியில் இயங்கி வரும் 6 KV Numeric UPS 2 வருட காலம் உத்திரவாத காலம் முடிவடைந்துள்ளதால் UPS வாங்கிய நிறுவனத்தால் சரி செய்ய முடியாத சூழ்நிலையிலுள்ளது. எனவே UPS-ல் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட ரூ.16,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3385**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சியில் இயங்கி கொண்டிருந்த Front line UPS பழுது ஏற்பட்டுள்ளது. இதனை பலமுறை UPS Engineer மூலம் சரிபார்த்தும் பழுது நீக்கம் செய்ய இயலவில்லை. மேலும் நகராட்சியில் Online software நடை முறைப்படுத்தப்பட்டுள்ளதால் அனைத்து Modules-ம் கணினி மூலம் பதிவேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது. UPS சரியாக இயங்கினால் தான் மின்தடை ஏற்படும் போது முறையாக பதிவேற்றம் செய்ய முடியும். எனவே அவசர அவசியம் கருதி புதிதாக 10 KVA UPS வாஙகுவற்கு ரூ.2,46,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி UPS வாங்குவதற்கும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1842/2019/இ1.

**நகர்மன்றத் தீர்மான எண். 3386**

**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் கணினி மற்றும் பிரிண்டர்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்திட 2019-2020-ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள மதிப்பீடு ரூ.85,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1843/2019/இ1.

**நகர்மன்றத் தீர்மான எண். 3387**

**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பி.பி. முனுசாமி வணிகவளாகத்தின் எதிர்புறம் உள்ள பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடம், பழுதடைந்த நகராட்சி கட்டிடம் மற்றும் பந்நியணி மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள வளாகத்தினுள் உள்ள பழுதடைந்துள்ள அங்கன்வாடி கட்டிடம் ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்துவதற்கு 11-11-2019 திங்கட்கிழமை ஏலம். ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி எவரும் கோரவில்லை. வரப்பெற்ற உயர்ந்த ஏலக்கேள்வி தொகை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண். | ஏலதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு.V. அருள்,<br>கண்ணக்கோடு,<br>மார்த்தாண்டம் | 33500/- |
| 2 | திரு.A செல்வம்,<br>வெங்஭ணம்கோடு,<br>மேல்புறம் | 31000/- |
| 3 | திரு.S பாபு,<br>கீழ்குளத்தன்கரை,<br>கண்ணக்கோடு | 34000/- |

வரப்பெற்ற ஏலக்கேள்விகளில் வரிசை எண்.3-ல் திரு.S பாபு என்பவரால் கோரப்பட்ட உயர்ந்த ஏலக்கேள்வியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3388**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 14

மார்த்தாண்டம் குலசேகரம் சாலை சந்திப்பில் உள்ள ஹமாம் டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் திரு. பீர்முகம்மது என்பவர் தனது கடையின் முன்புறம் உள்ள பஸ் நிறுத்தத்தை மாற்றி TNSTC டிப்போ பக்கம் அமைக்க உத்தரவு கேட்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி ஆணையர் மீது மதுரை உயர்நீதிமன்ற கிளையில் WP(MD)No.23126 of 2019—ன்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு 4-11-2019 அன்று உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பில் நீதிமன்றத்தில் வழக்காடிய வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- வழங்கிட நகராட்சி வழக்கறிஞர் திரு.பி. ஆதிமூலபாண்டியன் என்பவர் கேட்டுள்ளார். எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2142/2019/ந,அ.ஆ.

**நகர்மன்றத் தீர்மான எண். 3389**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 15

குழித்துறை நகராட்சி வருவாய் நிதியின் கீழ், கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 12-11-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | மார்த்தாண்டம் லாறிப்பேட்டையில் சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல் மற்றும் கழிவறையில் செப்டிக் டேங்க் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | 9.90 | 1) திரு.டி. ஜஸ்டின்குமார் மதிப்பீட்டை விட 0.01% குறைவு<br>2) திரு.டி. பிறேம்குமார் மதிப்பீட்டை விட 0.26% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3390**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 16

குழித்துறை நகராட்சி வருவாய் நிதியின் கீழ், கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 12-11-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.20 ஆர்.சி.தெருவில் சாலையின் மையப்பகுதியில் வடிகால் ஒடை அமைத்தல் மற்றும் சிமெண்டு தளம் அமைத்தல் | 9.90 | 1) திரு.பி. ஜெயச்சந்திரன் மதிப்பீட்டை விட 0.05% குறைவு<br>2) திரு.கே. கிருஷ்ணதாஸ் மதிப்பீட்டை விட 0.19% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.பி. ஜெயச்சந்திரன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3391**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 17

குழித்துறை நகராட்சி வருவாய் நிதியின் கீழ், கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 12-11-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திலுள்ள தெரு விளக்குகள் பராமரிப்பு செய்ய Street Light Box வாங்குதல் | 2.20 | 1) M/S வேல்முருகன் ஏஜென்சிஸ், நாகர்கோவில் 3.47% அதிகம்<br>2) M/Sரேவதி டிரேடார்ஸ், நாகர்கோவில் 0.19% மதிப்பீட்டில் குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் ரேவதி டிரேடார்ஸ் நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3392**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 18

குழித்துறை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ், கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 12-11-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | திருத்துவபுரம் காட்டுவிளை பகுதியில் பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றி புதிதாக 90 எம்.எம். பி.வி.சி. பைப் அமைக்கும் பணி செய்தல் | 2.35 | 1) திரு.சி. சுரேஷ் மதிப்பீட்டை விட 0.06% குறைவு<br>2) திரு.எஸ். பாபு மதிப்பீட்டை விட 0.74% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.சி. சுரேஷ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3393**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 19</u>

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் குடிநீர் பணி மேற்கொள்ள 12-11-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | குடிநீர் திட்டப்பணிக்கான மின்மோட்டார்கள் வினியோகம் செய்யும் பணி மேற்கொள்ளுதல் | 2.20 | 1) திரு.பி. ஜெயச்சந்திரன் மதிப்பீட்டை விட 0.17% குறைவு<br>2) திரு.பி. ஜெயப்பிரகாஷ் மதிப்பீட்டை விட 1.36% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.பி ஜெயச்சந்திரன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3394**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 20

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் குடிநீர் பணி மேற்கொள்ள 12-11-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | சப்பாத்து நீரேற்று நிலையத்திலிருந்து திருத்துவபுரம் OHT-க்கு நீரேற்றும் A மற்றும் B யூனிட் நீரேற்றிகளின் பழைய Flat cable மாற்றி புதிய 6Sq.mm 3 core Flat cable பதிக்கும் பணி செய்தல் | 0.60 | 1) திரு.பி. ஜெயச்சந்திரன் மதிப்பீட்டை விட 0.15% குறைவு<br>2) திரு.பி. ஜெயப்பிரகாஷ் மதிப்பீட்டை விட 1.57% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.பி ஜெயச்சந்திரன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3395**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 21</u>

குழித்துறை நகராட்சி வருவாய் நிதியின் கீழ், கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 12-11-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | மார்த்தாண்டம் மீன்சந்தை மற்றும் லாறிப்பேட்டையிலுள்ள சுற்று சுவர்கள் மற்றும் Grill அமைக்கும் பணி செய்தல் | 6.90 | 1) திரு.எஸ். பாபு மதிப்பீட்டை விட 0.04% குறைவு<br>2) திரு.சி. சுரேஷ் மதிப்பீட்டை விட 2.66% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.எஸ். பாபு என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3396**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 22</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலுள்ள சேகரமாகும் குப்பைக தரம்பிரித்து மக்கும் குப்பைகள் உரமாக மாற்றிட மார்த்தாண்டம் மீன்சந்தைகளின் பக்கமாக பசுமை உரக்குழியில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி உரக்குழியலில் குப்பைகளை கொட்டி நல்ல உரமாக மாற்றிட EM Solution 300 lr. Multipurpose என்ற நிறுவனத்தினரிடமிருந்து வாங்கிட சுகாதார ஆய்வாளரின் 22-11-2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ளதனடிப்படையில் EM Solution வாங்கிட அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:-அவசர அவசியமாக பொதுசுகாதார பிரிவிற்கு EM Solution தேவைப்படுவதால் 300 லிட்டர் வாங்கி வழங்கிடவும் அதற்கான தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3397**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 23

குழித்துறை நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளிலும் டெங்கு நோய் பரவாமல் தடுத்திட நகரிலுள்ள அனைத்து பள்ளி கூடங்களிலுள்ள மாணவ மாணவியர்கள் சத்துணவு மையங்களில் உள்ள குழந்தைகள், பொதுமக்கள் ஆகியவர்களுக்கு நிலவேம்பு கஷாயம் வழங்கிட நகர்மன்றத் தீர்மானம் எண்.3373, நாள் 11-11-2019-ல் 10 Tea can cattle வாங்கிட உத்தேச செலவினம் ரூ.25000/-த்திற்கு மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதால் 22-11-2019-ல் உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்.

| வ. எண் | | எண்ணம் | பௌர்ணமி மெட்டல்ஸ் | நியு பௌர்ணமி மெட்டல்ஸ் | ஸ்ரீமணிகண்டன் மெட்டல்ஸ் |
|---|---|---|---|---|---|
| 1 | டீகேன் | 10 | 18500 | 21500 | 19800 |
| 2 | Induction Stove | 1 | 2450 | 2850 | 2650 |
| 3 | SS பானை மூடி | 1 | 500 | 650 | 575 |
| 4 | Steel mug | 1 | 75 | 125 | 100 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பௌர்ணமி மெட்டல்ஸ் என்ற நிறுவனத்தினரிடமிருந்து பொருட்கள் வாங்கவும் தொகையினை பொது நிதியலிருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**நகர்மன்றத் தீர்மான எண். 3398**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 24

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு 22 முறைகள் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கப்பட்டும் ஒருவரும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை. 20-11-2019-ல் மறுஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரிசை எண்.1 மற்றும் இரண்டு இனங்களுக்கு இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். அதன்விபரம் கீழ்வருமாறு.

1) பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளின் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்
   1) திரு.எம். கிறிஸ்துராஜ் ஆண்டு குத்தகை தொகை ரூ.5,20,000/-
   2) திரு.டி. பாபுராஜ் ஆண்டு குத்தகை தொகை ரூ.4,90,000/-

2) மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இருசக்கர வாகன காப்பக உரிமம்
   1) திரு.எம். கிறிஸ்துராஜ் ஆண்டு குத்தகை தொகை ரூ.40,000/-
   2) திரு.டி. பாபுராஜ் ஆண்டு குத்தகை தொகை ரூ.35,000/-

3) வரிசை எண்.3 முதல் 12 வரையுள்ள இனங்களுக்கு வைப்புத் தொகை செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி ஒருவரும் கோரவில்லை என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.- வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-க்கு வைப்புத் தொகை ரூ.2,00,000/- செலுத்தி இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரியத்தில் திரு.எம். கிறிஸ்துராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை கூடுதலாக உள்ளது. மேலும் 2015-2016 முதல் 2017-2018 வரை மூன்று வருட காலத்திற்கு மேற்படி இனம் குத்தகைக்கு விடப்பட்டதில் மூன்று வருட சராசரி தொகையாக ரூ.815862/- உள்ளது. 1-1-2018 முதல் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் (ஒப்பந்தப்புள்ளி நாள் 1/2018, 2/2018, 3/2018, 4/2018, 5/2018, 6/2018, 7/2018, 8/2018, 20-11-2018, 5-12-2018, 28-12-2018, 11-1-2019, 22-2-2019, 26-2-2019, 8-3-2019, 26-6-2019, 26-8-2019, 12-9-2019, 25-9-2019, 18-10-2019, 29-10-2019 ஆகிய 20-க்கும் மேற்பட்ட தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரியும்) எவரும் கலந்து கொள்ளவில்லை. இதனால் துறை மூலம் வசூல் செய்யப்பட்டதில் 2018-2019-ம் வருடத்தில் ரூ.706173/-ம், 2019-2020-ம் ஆண்டு இதுநாள்வரைக்கும் ரூ.6,10,840/- வசூல் வந்துள்ளது. ஆகமொத்தம் இரண்டு வருடம் துறைமூலம் வசூல் செய்யப்பட்டதில் ரூ.13,17,613/- வரவாக எடுக்கப்பட்டுள்ளது. துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருவதில்

இதற்கென மூன்று துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வசூல் மேற்கொள்ளும் பட்சத்தில் அவர்களின் ஊதியம் குறைந்தபட்சம் மாதம் 1-க்கு ரூ.24000/- வீதம் 3 நபர்களுக்கு ரூ.72000/- ஊதியம் வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்கு ரூ.864000/- வழங்கப்பட்டுள்ளது. (24000x3=72000x12=864000/- மேலும் பேருந்து நிலையத்திகு வந்து செல்லும் பேருந்துகளுக்கு ரசீது புத்தகம் அச்சிடும் வகையில் தோராயமாக ரூ.50000/- வழங்கப்பட்டுள்ளது. மேற்படி செலவு தொகையில் 864000+50000= 914000/- வருகிறது.

மேலும், மார்த்தாண்டத்தில் மேம்பாலம் அமைக்கப்பட்டபின் அதிகபடியான பேருந்துகள், பேருந்து நிலையம் வராமல் நேரடியாக சென்று விடுவதாலும் மேற்படி இனத்தில் நாள் ஒன்றுக்கு தோராயமாக 195 பேருந்துகள் வந்து செல்வதாலும் 195 பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.12/- வீதம் ரூ.2340/- (195x12 = 2340) மட்டும் வசூல் செய்யப்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.70200/-ம் வருடத்திற்கு ரூ.842400/- (195x12/2346x30=70200x12=842400) தோராயமாகவே கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொகை பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை விட குறைவாகவே உள்ளது.

தற்போது உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி ரூ.520000/- என்பது நகராட்சி எந்தவித செலவு தொகையும் இன்றி வருவாயை ஈட்டிக்கொடுப்பதால் மன்றத்தால் அனுமதிக்கப்படுகிறது.

வரிசை 2-ல் கூறப்பட்டுள்ள இனத்திற்கு ரூ.50000/- வைப்புத் தொகை செலுத்தி இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரியத்தில் திரு.எம். கிறிஸ்துராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.40000/- கூடுதலாக உள்ளது. மேலும் மேற்படி இனத்திற்கு தொடர்ந்து இருபது முறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்டும் ஒருவரும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை.

மேற்படி குத்தகை இனத்தை இந்நகராட்சி துப்புரவு பணியாளரால் வசூல் செய்யப்பட்டு வருகிறது. துப்புரவு பணியாளருக்கு ஊதியமாக ஒருமாதத்திற்கு ரூ.24000/- வழங்கப்பட்டு வருகிறது. இரசீது புத்தகங்கள் அச்சிட்ட வகையில் ரூ.15000/- வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையிலும் வரவினைவிட செலவினமே கூடுதலாக உள்ளது. பணியாளர் பற்றாக்குறை காரணமாகவும், வருவாய் குறைவாக ஈட்டப்படுவதாலும் தற்போது ரூ.40000/- கேட்டுள்ள தொகை கடந்த மூன்று ஆண்டின் சாரசரி தொகையான ரூ.43000/-த்தில் ரூ.3000/- மட்டும் தான் குறைவு.

நகராட்சி பணியாளருக்கு வழங்கப்படும் ஊதியத்தினை கணக்கீடு செய்யும் பொழுது நகராட்சிக்கு இழப்பு தான். எனவே இங்கு பணி செய்யும் பணியாளரை வேறு பணிக்கு எடுக்கும் பொருட்டு நகராட்சி பணி சிறப்பாக செய்யவும் வாய்ப்பு உள்ளது. இதனால் நகராட்சிக்கு எவ்வித நிதியிழப்பும் இல்லை. எனவே நகராட்சி வருவாயை ஈட்டும் பொருட்டு

திரு.எம். கிறிஸ்துராஜ் என்பவரின் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து நகராட்சி இருசக்கரம் நிறுத்தம் இடத்தை ஒப்படைக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3399**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 25

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் அமைந்திருக்கும் IDSMT கடைகள் மற்றும் பேருந்து நிலைய பழைய கடைகள் ஆகிய இனங்களுக்கு 9 வருடம் முடிந்த நிலையில் பொதுஏலம் விடப்பட்டது. இதில் கடைகள் உரிமம் கிடைக்காத நபர்களுக்கு ஏற்கனவே செலுத்திய வைப்புத் தொகையினை திருப்பி வழங்க காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்டதால் தொகையினை திருப்பி வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

o

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ள தொகை | வைப்புத் தொகை பக்கம் வருடம் எண் |
|---|---|---|---|---|---|
| 1 | எம். கனகராஜ் | 1999–2000 | 9 | 31000 | |
| 2 | டி. ஜெயசிங் | 1999–2000 | 8 | 25000 | |
| 3 | அகம்மதுகான் | 2007–2008 | 3 | 69150 | |
| 4 | சிவகுமார் | 1999–2000 | 45 | 75000 | |

**நகர்மன்றத் தீர்மான எண். 3400**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 26

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட துரும்பல்விளை குறுக்கு தெருவில் வடிகால் ஓடை இல்லாத காரணத்தால் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி சாலை குண்டும் குழியுமாக சேதமடைந்துள்ளது. மேலும் மேற்படி தெருவில் இருக்கும் வீடுகளில் உள்ள கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் சாலையில் தேங்கி உள்ளது. எனவே மேற்படி சாலையில் 110M PVC

பைப்லைன் அமைத்து கழிவுநீரை மெயின் ரோட்டில் உள்ள வடிகால் ஓடையில் இணைப்பதற்கும் மேற்படி சாலையில் சிமெண்டு காங்கிரீட் தளம் அமைப்பதற்கும் ரூ.90,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3401**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 27

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய பழைய கடை எண்.8 குத்தகைதாரர் திரு.என். தேவராஜ் என்பவர் குத்தகை வைப்புத் தொகை மற்றும் ஒருவருட கூடுதல் வைப்புத் தொகை செலுத்த காரணத்தினால் கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக் கிளையில் தொடர்ந்த நீதிப்பேராணை WP.(MD)எண்.5418/2019 மற்றும் WP.(MD)எண்.9975/2019-க்கு நகராட்சி சார்பில் ஆஜராகிய வகைக்கு வழக்கு கட்டணம் ரூ.20000/- திரு.பி. ஆதிமூலபாண்டியன் உயர்நீதி மன்ற வழக்கறிஞருக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3402**
**அனுமதிக்கப்படுகிறது**

ஒப்பம்/- திரு.எஸ். மூர்த்தி,
ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.